
# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:6 Issue :23 July 2024

கோட்டை:6 வாயில்:23 ஜூலை 2024

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

# Aran

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஸ்டீபன்
முனைவர் ஓ முத்தையா
முனைவர் உமாதேவி
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
முனைவர் பொ. சுரேஷ்
முனைவர் ப.தனஞ்செயன்
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் *V*.வெங்கட்ராமன்
முனைவர் போ.கந்தசாமி
முனைவர் *P*.பாண்டிக்குமார்
முனைவர் ந. குமாரி
முனைவர் தயாநிதி
முனைவர் சந்திரசேகர்

## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

## இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

## முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்



**+917299587879**

www.aranejournal.com
aranjournal@gmail.com


அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.


Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


ஐங்குறு நூற்றில் நீர் நிலைகள்
பா. ரம்ஜான்

சங்ககால தமிழரின் பகுத்துண்டு பல் உயிர் ஓம்புதல்”பண்பாடு
முனைவர் ப. மணிகண்டன்

கவிதைக்கும் மெய்ப்பாட்டிற்கும் உள்ள தொடர்பு
செ. கயல்விழி

அறநெறி இலக்கியத்தில் தமிழர் மருத்துவம்
அ. குழந்தைசாமி

சிலப்பதிகாரம் காட்டும் நீர் வழிப்பயணங்கள்
சித்ரா.ரா

திருக்குறளில் வாய்மையில் சமரசம்
முனைவர் து. சிவசித்ரா

தமிழில் சொல்லகராதிகள் உருவாக்கமும் பயன்பாடும்
முனைவர் பூ. சேகர்

ஏகன் அநேகன்
அகல்யா தர்மலிங்கம்

Bhakti Marga of Saint Thyagaraja
R. Sudhalakxmi

The Evolution of Tattvas in Samkjya Philosophy
Varun Srivatsan

வேள் பாரிநாவலில் மன்னனும் மக்களும்
பொன். கனகா



அட்டைப்படம் உதவி
இணையம்

நன்றி

# அகத்தினுள்

யாரைக் கேட்டது இதயம் புதினத்தில் சமூகப்பார்வை
அ. சையதுஅலி பாத்திமா

என்.ஸ்ரீராம் கதைகளில் விளிம்பு நிலைமக்கள்
சுதா .மு

மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்
கோ. சத்யா

வண்டிப் பாதை நாவல்காட்டும் இயற்கை மருத்துவம்
சு. சத்தியப்பிரியா

பொன்னீலனின் மறுபக்கம் புதினத்தில் சிறு தெய்வங்களும் அதன் வழிபாட்டுமரபுகளும்
திருமதி சு.வினோதா

ஒப்பியல் நோக்கில் சைவ கிறிஸ்துவ குருத்துவம்
பூபாலசிங்கம். தனேஸ்

Representation of Culture in English Language Textbooks
U. Thulasivanthana

பழங்குடி மக்களின் சித்திரைத் திருவிழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

பழங்குடி மக்களின் மாட்டுப் பொங்கல் விழா சடங்கு முறைகள்
கா. இராஜமாணிக்கம்

தமிழகக் கல்வெட்டுகளில் கோயில் நிவேதன உணவுகள் - ஓர் ஆய்வு
முதுமுனைவர் பிரியாகிருஷ்ணன்

கல்வெட்டுகள் வாயிலாக அறியவரும் மருத்துவ செய்திகள்
அ. குழந்தைசாமி

அட்டைப்படம் உதவி
இணையம்
நன்றி


தமிழ்

# மேலாண்மை பொன்னுசாமி படைப்புகள் போற்றும் மானுட பிரவாகம்

## *Melanmai Ponnusamy's work is an admirable human act*


**கோ.சத்யா,**

ஆய்வு மாணவர், தமிழ்த்துறை,

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை,

**முனைவர்.வெ.சிவசங்கர்,**

ஆய்வு நெறியாளர், தமிழ்த்துறை,

வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை,



***Abstract***

*According to Siddha's statement that there is no reality like human being and it is the echo symbol of nature, the humanity of human being is seen by all as a reality. The modern Tamil dictionary of kriya gives manudam and manidam meaning human nature. These have been explained in detail in this article by Sahitya Akademi awardee Melanmai Ponnuchami in his works, Manuda Dharma and its manifestation as human behavior.*



*Key words: Humanity, Human dharma, human dignity, human conduct, Human Quality.*



**ஆய்வுச் சுருக்கம்:**

மானுடம் போல் ஒரு மெய்மை இல்லை அதுவே இயற்கையின் எதிரொலிச் சின்னம் என்ற சித்தரின் கூற்றிற்கிணங்க மானுடம் என்னும் மனிதத்தன்மையானது அனைவராலும் உண்மைத் தன்மையாய்ப் பார்க்கப்படுகிறது. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி மானுடம், மானிடம் என்றால் மனிதத் தன்மை என்று பொருள் தருகிறது. இவற்றை சாகித்ய அகடாமி விருது பெற்ற மேலாண்மை பொன்னுச்சாமி அவர்கள் தனது படைப்புகளில் மானுட தர்மத்தையும் அவை மானுட பிரவாகமாக வெளிப்படும் தன்மையையும் பொன்னுச்சாமியின் படைப்புகளின் மூலம் இக்கட்டுரையில் விரிவாக கூறப்பட்டுள்ளது.



**திறவுச் சொற்கள்:** மனிதம், மானுட தர்மம், மனித மாண்புகள், மானிட பிரவாகம், மனித நேயம்.


**முன்னுரை**

காலங்கள் மாறலாம், பழக்க வழக்கங்கள் மாறலாம், உணவுகள் மாறலாம், பழமைகள் மறைந்து புதுமைகள் பல உருவாகலாம், தொழில்நுட்ப வளர்ச்சி அதிகரித்து கொண்டே

இருக்கலாம், இனம் மொழிகளாலும், உருவங்களாலும் பல வேறுபாடுகள் ஏற்படலாம், எத்தனை வேறுபாடுகள் வந்தாலும் இந்த உலகில் அழித்து கொள்ளாமல் தன்னை நிலை நிறுத்தி கொண்டு தானும் வளர்ந்து மற்றவர்களையும் வளர்க்க கூடிய ஒரே சக்தி மானுடம் (மனிதம்) மட்டுமே. பல இடர்பாடுகளிலும், போராட்டங்களிலும் அது "மானுட பிரவாகமாக" உருவெடுக்கிறது. மனிதம் எல்லா காலகட்டங்களிலும் தன்னை ஏதேனும் ஒருவகையில் நிலைநிறுத்தி கொள்கிறது. இந்த கட்டுரையில் இலக்கியங்களில் மானுட தர்மத்தை மேலாண்மை பொன்னுசாமி தன்னுடைய படைப்புகளில் மானுட பிரவாகத்தை எவ்வாறு வெளிப்படுத்தியுள்ளனர் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**இலக்கியங்கள் காட்டும் மானுடம்**

தமிழ் இலக்கியங்கள் மானுட தர்மத்தை விதைகளை விதைக்கும் களஞ்சியங்களாக நிகழ்கின்றன.

மனிதனை மனிதன் மதிக்க வேண்டுமானால் மற்றவர்களிடம் அன்பு செலுத்த வேண்டும் அன்புதான் மானிட தர்மத்தின் ஊற்றுக்கண் அவை இலக்கியங்கள் வழியே மனித இனத்தில் படிந்துள்ள குற்றங்களை போக்கி மனிதனது பெருமையையும் உரிமையையும் மதிக்கும் வகையில் மானுடபிரவாகத்தை இலக்கியங்கள் போற்றுகின்றன.

மனிதனின் வாழ்வும், தாழ்வும் நிலத்தைப் பொறுத்து அமைவது இல்லை. அந்நிலத்தில் வாழக்கூடிய நன்மைகளைக் கொண்டு அமைவது, மனிதனை மனிதனாக மதிக்கப் பெறுவது மானுட தர்மம், மிக்கவனாக வாழ்வது, வாழ்கின்ற உலகம் நன்மை பயக்கும் என்று சங்ககாலப் புலவர்கள் அனைத்து காலத்திற்கும் பொருந்துமாறு தங்களுடைய பாடல்களில் குறிப்பிட்டுள்ளனர். மனிதம் இவ்வுலகில் பொறுப்பு மிகுந்தவான இருக்க வேண்டும் என்பதை.

***"நாடா கொன்றோ, காடா கொன்றோ***

***அவலா கொன்றோ, மிகையா கொன்றோ***

***எவ்வழி நலலவர் ஆடவர்***

***அவ்வழி நல்லை, வாழிய நிலனே"***

***(புறம், பா.எண்.187)***

என்ற பாடலில் ஒவையார் சுட்டிக்காட்டியுள்ளார்.

பசி, பிணி, பகை ஆகிய மூன்றும் மக்களைத் துன்புறுத்தக் கூடியது. உலக உயிர்கள் வாழ உணவு தேவைப்படுகிறது. பாரகம் அடங்கதும் பசிப்பிணி நீங்க வேண்டும் என்பதை அடிப்படைக் கொள்கையாகக் கொண்டுள்ளதை

***"பசியும் பிணியும் பகையும் நீங்கி***

***வசியும் வளனுள், சுரக்கென வாழ்த்தி"***

***சில.இ.வி.ஊ.வ.கா.72-23)***

இவ்வரிகள் உணர்த்துகின்றன.

*வளம் இல்லாத காலங்களில் புரவலர்கள் தங்களிடம் செல்வங்களை இரவலர்களுக்கு பகிர்ந்து கொடுக்கும் தன்மையுள்ளவர்களாக விளங்கியுள்ளனர். தலைவன் ஒருவரின் சிறிய இல்லத்திற்கு நாடிவரும் இரவலர்களின் தகுதியறிந்து கொடை வழங்குவதில் வல்லவனாகத் திகழ்ந்தான் என்பதை*

*வரிசையின் அளிக்கவும் வல்லன்*

*உரிதினின்*

*காவல் மன்னர் கடைமுகத்து உருக்கும்*

*போகுபலி எவண்சோறு போலத்*

*நூறுவும் வல்லன் அவன் நூவுங்காவே"*

*(புறம் 33)*

*என்ற பாடலடிகளால் அறியப்படுகிறது. வேந்தன் இரவலர்க்குப் பரிசாகத் தேரையும் கொடுத்தான் என்பதை*

*"எத்த இழையாரி நெடுந்தேர்*

*பயன்கெழு முள்@ர் மீமிசைப்*

*பட்டமாரி உறையினும் பலவே"*

*(புறம் : பா.எண் 123)*

*இப்பாடலில் மன்னனின் கொடைச்சிறப்பு வலியுறுத்தப்படுகிறது.*

*விருந்தோம்பல் என்பது புதியோர்க்கு உணவளித்தல் ஆகிய அரசர்கள் வரும் விருந்தினருக்கு உணவு அளிப்பதற்கு முன்னதாக அவர்களின் அழுக்குடைய பழைய ஆடையை நீக்கிப் புதிய ஆடையை வழங்கி உண்ணுவதற்கு அறுசுவை உணவினை படைத்தளிப்பான் என்பதை*

*"நீல்நிறச் சிதாஅர் களைந்த*

*வெளியது உடீஇ என் பசி களைந்தோனே"*

*(புறம் - பா.எண்.385).*

என்ற புறநானுற்றுப் பாடலடிகளால் அறிய முடிகிறது.

மேலும் நாலடியாரில்

"உறக்கும் துணையதோர் ஆலம்வித் தீண்டி

இறப்ப நிழல் பயந்தா அங் கறம்பயனும்

தான் சிறிதாயினும் தக்கார்கைப்

பட்டக்கால்

வான்றறிதாப் போத்து விடும்"

(நாலடி பா.எண்.38)

இப்பாடலில் விருந்தோம்பும் பண்பின் மூலம் மானுட பண்பு சிறந்து விளக்கியதை காணலாம்.

**மணிமேகலையில் மனிதம்**

உலகத்தில் கொடிய நோய் பசி நோய் என்கிறது மணிமேகலை. அமுதசுரபி பசியின் கொடுமையை உணர்த்துவதற்காகவே படைக்கப்பட்டது. அறங்களில் சிறந்த அறம்

**"அறமெனப் பருவ தியாதெனக் கேட்பின்**
**மறவாதிநுகேள் மன்னுயிர்க்கெல்லாம்**
**உண்டியுமுடையுமுறையுளுமல்லது**
**கண்டதில்லை..."**

உணவும் உடையும் உறையுளும் இல்லாதவர்க்கு அளிப்பதே அறங்களில் சிறந்தது. இம்மூன்றினுள் பசிப்பிணி போக்கல் மிகச்சிறப்பு வாய்ந்தது. புசியில் ஒருவன் இறந்துவிடும் நிலையில் அவனுக்கு உணவு கொடுபப்பவள் உயிர் கொடுக்கின்ற கடவுளுக்கு சமம் என்பதை

**மண்டிணி ஞாலத்து வாழ்வோர்க்கெல்லாம் உண்டி**
**கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"**

பசியினால் அவதியுறும் வறியவர்களுக்கு உணவளிப்பவர்களே உலகின் உண்மை நெறியில் வாழ்பவர்கள்

**"ஆற்றா மாக்கா எருப்பசிகளைவோர்**
**மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"**
**"என்றும்காணார் கேளார் கால்முடப்பட்டோர்**
**பேணுநரில்லோர் பிணிநருக்குற்றோர்**
**யாவரும் வருகவென் றிசைத்துடலூட்டி"**

என்றும் வறியவர்களுக்கு உணவளிப்பதே சிறப்பு என மனித மாண்புகளை மணிமேகலைக் கூடுகிறது.

மனித உயிர்கள் அனைத்தும் பிறப்பால் ஒன்றே. செய்யும் தொழில் வேறுபாட்டால் உயர்வு தாழ்வு பாராட்டுதல் கூடாது என்பது வள்ளுவப் பெருந்தகையின் கருத்து. எப்பொழுது

இவ்வுலகில் உயிர்கள் பிறக்கின்றனவோ அப்பொழுதே இவையனைத்தும் ஒன்றாகக் கருதும் இயல்புடையதே உயர்வு, தாழ்வு என்பதெல்லாம் ஒருவருடைய நற்செயல்இ தீயசெயல்களாலேயே அமைகின்றன. அதைவிடுத்து சாதி, சமயம், தொழில் போன்றவற்றால் அவ்வுயிர்களிடத்தே வேறுபாடு காட்டுதல் கூடாது என்பதை இக்குறளின் மூலம் வள்ளுவர் மனிதத்தை வலியுறுத்துகிறார்.

**“உலகத்தோடு ஒட்ட ஒழுவல் பலகற்றும்**
***கல்லார் அறிவிலா தார்” (கு.140)***

அன்பு வழியே உயிருள்ள உடலின் செயல் ஆகும். அன்பில்லாத உடல் எலும்பைத் தோலால் போர்த்திய கூடே ஆகும் என்று வள்ளுவர் கூறுகிறார். அன்பை இவ்வுலகை இன்றும் நிலைநிறுத்தி இருக்கிறது. இவ்வுலகே அன்பால் ஒருங்கிணைந்து செயல்படுகிறது. அன்பு இல்லையேல் இவ்வுலகு பிளவுபடும். மனிதநேயம் மறையும், இவ்வுலக உயிர்கள் அழியும், ஆதலால்தான் வள்ளுவர் அன்பை வலியுறுத்துகிறார். உலகத்தோடு நாம் அனைவரும் பொருத்தி வாழ முற்படவேண்டும் என்றும் அவ்வாறு பொருத்தி வாழாதார் பல நூல்களைக் கற்றிருந்தாலும் அவர் அறிவில்லாதவரே என்பதை வள்ளுவர் இக்குறளில் கூறுகிறார்.

**“காக்கை கரவா கரைந்துண்ணும் ஆக்கம்**
**அன்ன நீரார்க் கஉள”**

காக்கை தனது உணவை ஒருபோதும் மறைக்காமல் தன் சுற்றத்தை அழைத்து உண்ணும் தன்மை உடையது. காக்கை போன்று சுற்றம் தழுவும் குணம் உடையவரே. ஆக்கம் பெறுவர் என்கிறார்.

**மானுடமும் மனிதமும்**

ஓர் எழுத்தாளனின் இளவயதில் ஏற்பட்ட பாதிப்புகளும் அனுபவங்களும் அவனது படைப்பாக்கத்தின் பின்புலமாக உள்ளன. இளம் வயதில் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு, குடும்ப கட்டமைப்பு சமூகத்தின் கட்டுமானம் போன்ற பல்வேறு விதமான பாதிப்புகள் காரணங்கள் வாழ்வில் முன்னேறத் தடைகளாக உள்ளன. இதனால் பல்வேறு விதமான பாதிப்புகள் ஏற்பட்டு பல்வேறு நிலைகளில் மனிதன் மாறிவிடுகிறான். சில வேளைகளில் படைப்பாளியாகவும் மாறிவிடுகிறான்.

மனிதனின் அடி மனதில் பதிந்திருக்கும் பதிவுகள் அவன் படைப்பாளியாக மாற துணைபுரிகின்றன. தனி மனிதப் படைப்பு சமுதாய உறவுகளோடும் மனிதர்களோடும் உள்ள தொடர்புகளைச் சிறப்பாகக் காட்டும் போது சமூகத்தில் சிறந்த கலைப்படைப்பாக மாறிவிடுகிறது.

எனவே தான் 5ஆம் வகுப்பு வரை மட்டுமே படித்த மேலாண்மை பொன்னுசாமி அவர்கள்சிறந்த நாவல்களையும், சிறுகதைகளையும் தனது அனுபவத்தால் மட்டுமே சிறந்த படைப்புகளை படைக்க முடிந்தது.

மேலாண்மை பொன்னுச்சாமி தமது படைப்புகள் குறித்து 'படைப்பு என்பது எனது இதயம் பெருமூச்சு, ஆத்ம நீச்சல், வாழ்க்கையின் மூர்க்கத்துடன் நான் கட்டிப்புரண்டு நடத்திய மல்லுக்கட்டுகளில் கிடைத்த காயங்களும், ரணங்களும், வெற்றிகளும்தான் எனது படைப்புகள் என்று படைப்பு முயற்சிகளில் எக்கணத்திலும் போலித்தனமான பாவலாக்களோ, பம்மாத்துக்களோ முகம் காட்டியதில்லை. சமூக வாழ்க்கையில் எனக்குக் கிடைத்த அனுபவங்களும் அனுபவ பரிசீலனையில் விளைந்த வெளிச்சமும்தான் எனது படைப்புகள் எனக் குறிப்பிடுகின்றார். எனது படைப்புகளை நிரல்படுத்தினால் எங்கள் கிராமத்தின் வரலாற்றை அறியலாம் என்கிறார்.

பழமையையும் பழமைசார்ந்த மூட நம்பிக்கைகளையும் எதிர்க்கும் இவரின் எழுத்துகள், புதுமைகள் என்ற பெயரால் மனிதநேய அடிப்படையிலுள்ள மரபுரீதியான பயன்பாடுகளைக் கட்டிக்காக்க அறைகூவல் விடுகின்றன.

'மானுடம் என்ற ஒன்றே நிஜம் என்பது அவனது அனுபவத்தில் மலர்ந்தது. இந்திக்காரனின் இனிய புன்னகையும், சீக்கியனின் வலிமையான தைர்யமூட்டலும் மலையாளியின் அன்பான தோழமையும், முஸ்லீமின் கருணை மிக்க தழுவல்களும் அவனுக்குள் மனவெளிச்சமான உணர்வனுபவமாகியிருந்தது.

(ஊர்மண் பக்கம்: 74)

மனிதர்கள் எந்த பேதமின்றி ஒற்றுமையுடன் இருப்பதை மானுடம் என்று பொன்னுச்சாமி தனது நாவலில் கூறியுள்ளர்.

**மனித வாழ்க்கையில் மானுடப் பிரவாகம்**

வாழ்க்கை வாழ்க்கையாகத் தோன்றவில்லை. மனிதர் வாழ்கிற மனிதத் தன்மையுள்ள வாழ்க்கையாக இல்லை. அன்பு, பாசம், நட்பு, நம்பிக்கை, நாணயம், தோழமை என்கிற உள்-வெளி லட்சணங்களோடு ஒளிர்கிற இயல்பான மனித வாழ்க்கையாக இல்லை. மனிதர்களோடு கலந்து மனிதத்தன்மையோடு வாழ்கிற மனித வாழ்க்கை நமக்கு லபிக்கவில்லை

**(ஊர்மண், 45).**

**மேலாண்மை பொன்னுச்சாமியின் 'ஊர்மண்'**

சாதி, மதம், இனம் போன்றவற்றை தாண்டி உறவுகள் தான் மனிதம் என்ற எழுத்தாளர் பொன்னுச்சாமியின் ஊர்மண் எனும் நாவலில் வெளிப்படுத்தியுள்ளார். ஒரு மனிதன் எந்த சூழ்நிலையிலும் தனக்கு எவ்வகை இடையூறு நேர்ந்தாலும் தனது மனித பண்புகளை எவருக்காகவும் மாற்றிக் கொள்ளாமல் தனி மனித பகை முரண்பாடு ஏற்பட்டால் கூட தன்னிலை மாறாமல் எவ்வாறு மனிதத்தை போற்றினார் என்பதை ஊர்மண்ணில் 'தாழையா நாடார்' கதாபாத்திரத்தின் மூலமாக எழுத்தாளர் படைப்பை படைத்துள்ளார்.

**ஊர் மண்ணில் மானுட தர்மம்**

"ஒன்னை நாளைக்கு வெட்டப்போற எதிரி வந்தாலும் கூட.. அவனுக்கும் மனச்சுத்தமா வைத்தியம் பாக்கணும்இ அதுதான் நீ எனக்குச் செய்ற மரியாதை'ன்னாரு. அப்பேர்ப்பட்டதுதான், இந்த வைத்திய தர்மம்.

அடடா.. இந்த வைத்திய தர்மமே.. மானுட தர்மமா.. உலக தர்மமா.. எல்லா விஷயத்துலேயும் ஆகிட்டா.. எம்புட்டு நல்லாயிருக்கும். (பக்கம் 274)

மானுட தர்மத்தை உலக தர்மமாக மேலாண்மை பொன்னுச்சாமி அவர்கள் கூறியுள்ளார்.

**மின்சாரப் பூவில் மனித சமூக வெளிப்பாடு**

பெரியவங்களுக்கு அறிவு எங்கே போச்சு? சின்னவங்களுக்கு புத்தி சொல்ல வேண்டாமா? யாருகிட்டே, யாரு, எப்படிப் பழகுறதுன்னு சுட்டிக்காட்டணும்லே?

நெருஞ்சி முள்ளாக மனசுக்குள் குத்தி உறுத்தின. காந்தலான உறுத்தல், சமுதாய அடுக்குகளின் ஏற்ற வித்தியாசங்களை சுட்டிக் காட்டுகிற முள்.

*நீ இன்ன சாதி... உன் சாதியின் இடம் இது.. என்று சின்னஞ்சிறுவனின் வெள்ளை மனசில் நச்சு வண'ணம் ஏற்றுகிற சமூகக் குரூரம், சாதியக் குணம்..*

*எல்லா மனுசரும் ஒண்ணுதானே' என்கிற மழலை மனசில் சமூகத்தின் மேடு பள்ளப்புண்கள் வடிக்கிற சீழ் நாற்றம். 'எல்லா மனுசரும் ஒன்றல்ல' என்கிற கசப்பான யதார்த்தத்தை கற்றுத் தருகிற சமுதாய வாழ்க்கை.*

*அக உலகத் தூய்மையை அழுக்காக்கி... விஷமும், விஷமுமாய் ஆக்குகிற புற உலகக் கோணல். மனுச மனசை வதக்கி வார்த்து, கோணல் குறுகலாக வடிவமாக்குகிற சமூகம், மனித உறவை மிருக உறவாக நிறம் மாற்றுகிற பயங்கரம்.*

*(பக்கம் 177)*

*செந்தட்டிக்கு சூழலே மனித அநீதியாகத் தென்படுகிறது. வெறுப்பும், கசப்புமாக காறித்துப்பத் தோன்றுகிறது.*

*(பக்கம் 178)*

*களையற்று, உயிர்வற்றி.. பிரேத முகமாய் தோற்றமளிக்கிற பயங்கரம், பேயடித்தவனாக இருந்தான், சாதிப்பேய்.*

*(பக்கம் 179)*

*மயானக் கரையில் ஓர் உறவு செத்துக் கொண்டிருப்பதாக உணர்கிற செந்தட்டி, சுற்றிலும் இருள், சமூக இருள்.*

*(பக்கம் 182)*

மனித மாண்புகள் சமூகத்தால் அழிக்கப்படுவதை வெளிப்படுத்தியுள்ளார்.

**மேலாண்மை பொன்னுச்சாமி படைப்பில் மானுட பிரவாகம் சிறுகதை**

மானுடம் காலத்தால் எவ்வளவு மாறினாலும் ஏதாவது ஒரு கட்டத்தில் மானுட பிரவாகமாக உருவெடுக்கும் என்பதற்கு மேலாண்மை பொன்னுச்சாமியின் மானுட பிரவாகம் சிறுகதை ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

*மனசில் பூக்களை அள்ளித் தூவுகிற அந்தச் சிரிப்பு, காடைக்குருவியாய் அவன் ஓடுகிற அந்த ஓட்டம், அந்தச் சிறுவனின் உதட்டோரங்களில் வழிகிற எச்சில், அதில் ததும்பி நிற்கிற அன்புணர்ச்சி...*

*சாமிநாதனுக்குள் ஊற்றெடுக்கிற ஒரு பிரவாகம், உள்ளுக்குள் ஏதோ நொறுங்கிச் சரிகிற உணர்வு, கண்களில் உறுத்திக்கொண்டு வெளிவரத் துடிக்கிற கண்ணீர்.*

*(பக்கம் 18, மானாவாரிப் பூ)*

*இவன் தோளில் முகம் புதைக்கிறான், அவனது கண்ணீர் தோளில்...*

*முழிக்கக்கூடாத முகங்கள் ஒன்று கையில், ஒன்று தோளில்.*

*இவனுக்குள் கற்றையாய் ஊற்றெடுத்த மானுடப் பிரவாகம் - நொறுங்கிச் சரிந்து கிடந்த கழிசடைகளையெல்லாம் அடித்துக் கொண்டு கரைபுரள*

*ஆறுதல் தேடி அலைமோதுகிற அந்த ஆத்மாக்களை அன்போடும் அழுகையோடும் அணைத்துக் கொண்டான்.*

*இவனும் துக்கம் தாளாமல் வெடித்துக் கதறிவிட்டான்.*

(பக்கம் 20, மானாவாரிப் பூ)

**மானுடம் சிறுகதையில் மானுட பிரவாகம்**

மானுடத்தின் மகிமையை மானுடம் சிறுகதையின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் ஆசிரியர். தற்கால சூழ்நிலையில் இயற்கையின் பாதிப்பில் மனிதர்கள் தங்களை மானுட தர்மங்களை போற்றுகின்றனர் என்பதை பொன்னுச்சாமி 1998ல் வெளிவந்த தனது மானுடம் சிறுகதை படைப்பின் மூலம் பிரதிபலித்துள்ளார்.

ஒவவொரு வேலைக்கும் எல்லோரும் "நான், நீ யென்று முண்டியடித்து போட்டி போட்டனர், இதற்கிடையே —

சொதசொதத்த மண்சரிவுகளுக்குள்ளேயே மனித உயிர்களை பதனமாகத் தேடுகிற முயற்சியில் சிலர், பரபரப்பும் மனப்பதைப்புமாக அவர்கள்,

வெங்கடத்தாயும் ஓடி ஓடி கட்டைகளை எடுத்து, தூக்கிச் சுமந்து, அடுக்கினாள், பனங்கட்டைகள், உள்ளங்கையெல்லாம் சிராய்ப்புகள், வலித்தது. சுருக் சுருக் கென்று குத்துகிற வலி.

நனைந்த சேலை காலோடு அப்ப" நாசிநுனியில் மழைத்துளி, செவி நுனியில் நீர்த்துளி,முகத்தில் "சட்டோ சட்டே ரென்று அறைகிற மழை, அசுரமழை,

லட்சுமணன் கூட ஓடி ஓடி ஓடுகளைச் சுமக்கிற வேகம், உற்சாகமாக நனைகிற மகனின் துரிதம்,

இவளுக்கு வலி போன மாயம் தெரியவில்லை.

கட்டைக் குவியல்களை விலக்கிக் கொண்டு, சன்னாசி, ராமாயி, மகள் மூவரையும் சேறும் நீரும் பயமும் அப்பிய நிலையில் கைத்தாங்கலாக ஏாழுட்டுப் பேர் தாங்கித் தாங்கிக் கொண்டிருந்தனர்.

மனித வேர்வைக்கு முன்னால் நிற்க முடியாத பயத்தில், மழை வெறிக்கத் துவங்கியது, அரவமடங்கிய அசுரம்.

வேர்வையும் பரபரப்புமாக, நீரில் நனைந்த உடம்புமாக" சிதைவுகளுக்குள்ளிருந்து வாழ்வை மீட்கிற ஜனங்களின் வெற்றி மின்னல்களைப் பார்க்கிற ஆசையில்-

மேகங்களை விலக்கிக் கொண்டு எட்டிப் பார்த்தது፦ நீல நிற ஆகாய முகம்.

(பக்கம் 79-80, மனப் பூ)

**முடிவுரை**

பழங்காலம் முதல் தற்போதைய காலம் வரை மனிதர்களிடையே பல நாகரிக மாற்றங்கள் அமைந்தாலும் பல அறிவியல் மற்றும் விஞ;ஞான வளர்ச்சி அதிகமாக வளர்ச்சியடைந்திருந்தாலும் மனிதர்களிடையே மாறாமல் இருப்பது "மனிதம்" மட்டுமே. தமிழிலக்கியங்களில் மனிதம் குறித்த கருத்தாக்கங்கள் எடுத்துரைத்து கொண்டே தான் உள்ளது. அதில் மேலாண்மை பொன்னுச்சாமியும் தனது படைப்புகளில் மானுடத்தை பற்றியும் அவை மானுட பிரவாகமாக உருவாகும் நிகழ்வுகளை தனது படைப்புகளில் வாழ்வியல் சூழ்நிலைகளாக கண்முன்னே காட்சி படுத்துகிறார்.

**"மனிதர்கள் மாறலாம்**

**மனித மாண்புகள் மாறாது".**

**துணைநூற்பாட்டியல்**

1. ஆங்கில தமிழ் அகராதி - ஏ.சிதம்பரநாத செட்டியார்
2. க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி, க்ரியா எஸ்.ராமகிருஷ்ணன், சென்னை
3. புறநானூறு (மூலமும் உரையும்) மாணிக்கவாசகன் ஞா. ஆறாம் பதிப்பு, 2012, உமா பதிப்பதிகம், பாரிமுனை, சென்னை — 1.
4. மேலாண்மை பொன்னுச்சாமி படைப்புகள், கங்கை புத்தக நிலையம், தியாகராயநகர், சென்னை — 17.
5. திருக்குறள், பூம்புகார் பதிப்பகம், சென்னை.

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2024, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்-அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com